உ
சிவமயம்

# சிதம்பரநாதச் செட்டியார்
# நூற்றாண்டு ஜயந்தி மலர்



# SITHAMBARANATHA CHETTIAR

## CENTENARY SOUVENIR

9.9.89

University of Jaffna
230.92
CIT
250239(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சிவதர்ம சீலர்

சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார்

230.92
CIT
B/P

அவர்களின்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

# நூறுவது ஆண்டு

# ஜயந்தி மலர்

250239

250239 N.A.

தொகுப்பாசிரியர்

செல்வி மு. உமாசங்கரி B. A. (Hons)

Donated by:-
Mr. K. C. KULA

University of Jaffna
250239
Library

9.9.89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்கில ஹூ ஆவணி மீ 24 ம் திகதி
(ஆவணி மூல நவமித்திதி)

வெளியீடு

சி. முத்துக்குமாரன்
411/2 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு

சைவப்பிரகாச அச்சகம்,
450 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கி
செல்வ மதிதோய செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே.

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததமும் தமிழ் வேதம் தானுண்ட தவச் செல்வன்

பத்திக்கோர் தவப்புதல்வன் பண்பாட்டின் தனித்தோன்றல்
எத்திக்கும் புகழ்மணக்கும் இணையில்லாச் செயல்வீரன்
முத்திக்கு வழிவகுத்த மூதறிஞன் இந்நாட்டின்
சித்திக்கே வாழ்ந்தவர்நற் சிதம்பரநா தக்குரிசில்!

சிந்தைதனிற் சிவநாமம் திகழ்மார்பிற் கண்டிகையே
சந்ததமும் தமிழ் வேதம் தானுண்ட தவச்செல்வன்
எந்தவிடர் வந்தாலும் ஏத்துவது சைவமெனச்
சொந்தமதாய் உழைத்திட்ட சுடர்மணியே நம் நாதன்.

அன்பினிலே அறங்கண்டே அருள்நெறிசேர் ஆற்றலுடன்
இன்பமது சிவனுருவம் இறைஞ்சுவதே எனக்கொண்டோன்
துன்பமது காணுநற் தூயபணி பலசெய்தோன்
நன்னலங்கள் நாடறியும் நல்லுலகம் வாழ்வறியும்.

சிவசமயம் வளர்ப்பதற்காய்ச் சிந்தைதனிற் சிவங்கண்டும்
தவமானங் குலங்கல்வி தனித்தன்மை பலகொண்டும்
உவமானஞ் சொல்லவொணு உவகையுடன் உள்ளத்தால்
நவமாகப் பணிசெய்தோன் நல்லசிதம் பரநாதன்.

தந்தையவர் பசுபதியார் தவப்பணிகள் மேற்கொண்டே
சிந்தையதாற் செய்பணிகள் சிவசமயம் வளர்ப்பதற்காய்ச்
சந்ததமும் சைவபரி பாலனஞ்செய் சபைதனக்குச்
சொந்தநல் விடங்கண்ட சுந்தரனுர் இவரன்றே!


திருந்துபுகழ்க் கேதீச்சரம் சிறந்திடவே பணிசெய்தோன்
பொருந்துநலஞ் சிறந்தோங்கப் பொதுத்தொண்டு பலசெய்தோன்
இருந்துபுகழ் வாழ்கின்ற இந்துக்கல் லூரிக்கோர்
விருந்தாக விளங்கியவன் வீரமிகும் இந்நாதன்.

தென்னுட்டில் அன்றொருநாள் திகழ் மன்னன் ராசராசன்
அன்னவன்றன் தவப்புதல்வன் அணிகொள்ரா சேந்திரன்போல்
இந்நாட்டில் எம்மவர்க்காய் இலங்கியநற் பசுபதியார்
பொன்னுமம் முன்றொடமும் புகழ்நாமம் வாழியவே.

சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை B. A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதர்ம சீலர் உயர்திரு
சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார்
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உரை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இலங்கையில் சோழர் வருகைக்குப் பின்னர் இன்றுவரை இங்கு இந்துமதம் வளர்ச்சியுற்றதை ஆராய்ந்தவிடத்து, யான் பல சைவப் பெரியார்களின் வரலாற்றுக் குறிப்புக்களை மிக நுணுக்கமாக அறிய வாய்ப்புக் கிடைத்தது. இந்நூற்றாண்டில் சைவமக்களுக்குப் பெரும் வழிகாட்டிகளாக அமைந்தவற்றில் திருக்கேதீஸ்வரம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சைவபரிபாலன சபை, இந்துசாதனம் ஆகியவைகளும் அடங்கும். இவற்றைத் தாபிப்பதற்கும் நெறிப்படுத்துவதற்கும் வழிகாட்டியான உயர்திரு பசுபதிச் செட்டியார் போன்ற சீலர்களின் சேவைகள் நன்கு போற்றப்பட வேண்டியவை. இதே வழியில் அவர்தம் புத்திரர் உயர்திரு சிதம்பரநாதச் செட்டியாரவர்களும் இத்தாபனங்களுக்குத் தொண்டாற்றிய விபரங்களைப் பல சஞ்சிகைகளும் நூல்களும் எடுத்துக் கூறியிருப்பதை யான் நன்கு அவதானித்துள்ளேன்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இந்துசாதனம் ஆகியன நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடாத்தும் இவ்வேளையில் உயர்திரு சிதம்பரநாதச் செட்டியாரவர்களின் நூற்றாண்டு ஜயந்தியும் நிகழ்கின்றது. அன்னாருடைய அரும் பெரும் தொண்டுகளைப் பற்றி அவ்வப்போது பல பேரறிஞர்கள் பத்திரிகை வாயிலாகவும், சஞ்சிகைகள், நூல்கள் வாயிலாகவும் குறிப்பிட்டவற்றைத் தொகுத்து ஒரு சிறு மலர் வடிவமாக்க முனைந்துள்ளேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய விஞ்ஞான கூடமும், இந்துசாதனப் பத்திரிகைக் காரியாலயமும் அப்பெரியாரின் அழியாச் சின்னங்களாக நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலும் கூட உயர்திரு செட்டியார் அவர்கள் பங்கு கொண்ட பணிகள் அளப்பில. வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சைவபரிபாலன சபை, இந்துசாதனம் ஆகியவை சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியில் தோன்றியிராது விட்டால் சைவமும் தமிழும் மங்கிப் புறச்சமயம் மேலோங்கி இருக்கும். இந்நிலை ஏற்படாமல் வீர தீரத்துடன் உழைத்த இப்பெரியார்களை நினைவு கூர்ந்து அவர்களின் பணியை நாமும் தொடர வேண்டும் என்ற பெரும் அவாவினால் இம்மலரைத் தொகுக்கும் பணியில் ஈடுபடலானேன்.

உயர்திரு செட்டியாரவர்கள் தாம் இடையறாது பூஜித்து வந்த தில்லை நடராஜப் பெருமானின் திவ்விய குஞ்சிதபாதத்தில் இம்மலரைச் சூட்டுகின்றேன். வணக்கம்.

யாழ்ப்பாணம். மு. உமாசங்கரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருபாதம்
ஓம் நம சிவாய

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
மதுரகான சுதாரத்ன தவமுனி
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள்

அருளிய வாழ்த்துரை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# "சிவதர்ம சீலர்"

சிவத்திரு சிதம்பரநாதச் செட்டியார் அவர்களுடைய சைவப் பரம்பரையை அறியாதார் மிகச் சிலரே. இவர்களுடைய மூதாதையினரால் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இந்துசாதனம் முதலியன நமது சமயத்தின் அழியாச் சின்னங்களாகத் துலங்கி வருவதைக் கண்கூடாகக் காணலாம். நமது பூர்வாச்சிரமத்தில் சிவத்திரு செட்டியார் அவர்களுடன் பல வகைகளில் தொடர்பு கொண்டிருந்தேன். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் பூஜா காலங்களில் திருமுறைகள் பாடும் பொழுது அவற்றைக் கவனித்து நன்கு ஊக்குவித்தவர்கள் அவர்களே. அக்கோவிலில் வலம் வரும் போதெல்லாம் திருமுறைகளை உரக்கப் பாடுவார்கள். சாரீர சம்பத்தும் சரீர சம்பத்தும் ஒருங்கே இணையப் பெற்ற ஒரு பெருந்தகை. சிறந்த சிவ பூஜா துரந்தரர். அக்காலத்தில் வாழ்ந்து சிறந்த கதாப் பிரசங்கங்களைச் செய்து வந்த சச்சிதானந்த ராஜயோகிகள் என்றழைக்கப்பட்ட ஸ்ரீ சங்கரசுப்பையர் அவர்களுடன் நெருங்கிப் பழகிய செட்டியாரவர்கள் என்னையும் அந்த நிலையில் ஈடுபட்டுத் தொண்டு செய்யப் பெரும் ஊக்கமளித்தார்கள்.

திருக்கேதீச்சரத் திருப்பணியில் ஸ்ரீ செட்டியாரவர்களுடைய பங்கு எம்முடைய மதுரை குரு மகா சந்நிதானத்தை அதில் ஈடுபடச் செய்ததே பெரும் பங்கு. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞான வைரவர் கோவில் கும்பாபிஷேகம், திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகம், வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கும்பாபிஷேகம் ஆகியவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றில் ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் எடுத்த பங்கு அளப்பரியது. அன்னாரது சிவதர்மப் பணிகளைப் பாராட்டி அன்னாருடைய திரு உருவப் படத்தை மிகவும் பெருமையும் பழைமையும் வாய்ந்த சைவத் தாபனமாகிய சைவ பரிபாலன சபை திறந்து வைப்பது மிகவும் பாராட்டுதற்குரியது.

சபையினருக்கு எல்லா நலன்களும் கிடைக்குமாறு அங்கயற் கண்ணி பாகனும் ஆலவாய் அண்ணலை உளமாரப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

(மறுபிரசுரம்)

---

## விநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைக டீர்ப்பாம்.

## வெண்பா

ஆவணி மூலம் அருந்தவநாள் சைவநெறி
மேலணியாய் வண்ணை மிளிர்ந்ததே - நாவண்
நாவலர்சி தம்பர நாதனருட் செட்டியார்
பூவலம் விட்ட பொழுது.

நம. சிவப்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவேோம்

S. செல்வராஜா

(சட்டத்தரணியும், மூதறிஞரும்,
சைவபரிபாலன சபையின்
முன்னைநாள் தலைவரும்)



இலங்கைச் சைவ மக்களின் பெருமைக்குரிய ஸ்தாபனங்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, இந்து சாதனம், இந்துக் கல்லூரி ஆகிய இம் மூன்றும் நூற்றாண்டு விழாவை நடாத்தும் வேளையில், இம் மூன்று ஸ்தாபனங்களுடன் இணைந்து ஆக்க வேலைகள் பல புரிந்து பெருந் தொண்டாற்றிய வண்ணை உயர்திரு சித மு. ப. சிதம்பரநாதச் செட்டியாரவர்களின் நூற்றாண்டு ஜயந்தி தினமும் இவ்வாண்டு 9.9.89 அன்று நிகழ இருப்பதை அறிந்து உவகையும் பெருமிதமும் கொள்கிறேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்ப காலத்தில் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் ஆதரவில் நடாத்தப் பெற்ற முதற் பட்டதாரி வகுப்பில் எனது பெரிய த்ந்தையார் திரு. C K. சுவாமிநாதன் அவர்களும் எனது தந்தையார் திரு. V. M. சரவணமுத்து அவர்களும் வேறும் நால்வரும் மாணவர்களாகச் சேர்ந்து, பின்னர் திரு. C. K. சுவாமிநாதன் அவர்களும், நீராவியடி C. விசுவநாதன் அவர்களுமே முதற் பட்டதாரிகளாக வந்தார்கள். இக்கல்லூரியிற் பலகாலம் பட்டதாரி ஆசிரியராகக் கற்பித்தவரும், பின்னர் இராமநாதன் கல்லூரியில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவருமான திரு C K. சுவாமிநாதன் எனக்கு இந்துக் கல்லூரியில் தனது அனுபவங்களைக் கூறி, ஸ்ரீ பசுபதிச் செட்டியார் சைவபரிபாலன சபைக்கும் இந்துக் கல்லூரிக்கும் ஆற்றிய மகத்தான, ஈடுஇணையற்ற சேவைகளைப் பற்றிக் கூறியிருக்கிறார். இன்னும் எனது பெரிய தந்தையாரும் ஸ்ரீ பசுபதிச் செட்டியாரின் மைத்துனருமாகிய திரு. V. S. குருநாதபிள்ளை அக்காலத்தில் தென்னிந்தியாவில் வனபரிபாலன அதிகாரி Conservator of forests இருந்த பொழுது இந்துக் கல்லூரிக்கு வேண்டிய அத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களையும் அவர்தம் செலவிலேயே அனுப்பியிருந்தார் என்பதை அவர்கள் வாயிலாக நான் கேட்டிருக்கிறேன். மேலும் இதே குரு நாதபிள்ளை அவர்களே தனது கிராமமாகிய கொழும்புத்துறையில் இப்போதுள்ள கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தை ஆரம் பித்து வைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

" தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச் சத்தாற் காணப் படும் "

என்று வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுப் பிரகாரம் பத்து தசாப்தங்களுக்கு முன்னர் உயர்திரு பசுபதிச்செட்டியார் போன்ற தீர்க்கதரிசிகள் தோன்றியிராது விட்டால் சைவமக்களாகிய எங்கள் நிலைமை இன்று வேறுபட்டதாக இருந்திருக்கும் என்பதற்கைய மில்லை. தந்தையாரின் அரும்பெரும் இலட்சியங்களைப் பின்பற்றியே அவரது புத்திரர் உயர்திரு சிதம்பரநாதச் செட்டியாரும் வாழ்ந்து வந்தார்கள். ஏற்ற தருணங்களில் செய்யவேண்டியவற்றை நியமமா கப் பூர்த்தி செய்து வைக்கும் ஆற்றல் படைத்தவர். வைதீகச் சைவப் பண்பாளர், சிவபூஜா துரந்தரர், இந்துசாதன ஆலயத்துக்கு நிரந் தரமான கட்டிடம் மிக அவசியமாகத் தேவைப்பட்டபோது, சபை யின் ஆதரவைப் பெற்று காணிவாங்கி, அழகிய விசாலமான கட்டி டம் அமைத்து மிகக் குறுகிய காலத்தில் சைவப்பிரகாச யந்திர சாலையும், இந்துசாதன ஆலயமும் திறம்பட இயங்கிவரத் தொண் டாற்றினர். இன்றும் வண்ணார்பண்ணையில் ஒரு கேந்திரஸ்தானத் தில் இவை அமைந்திருப்பதை எல்லோரும் அறியலாம்.

யான், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பல வருடங்கள் மாணவனாகவும், சைவபரிபாலன சபையில சென்ற ஐம்பது வருடங் களாக அதன் காரியக் குழுவிலும் அங்கத்துவம் வகிப்பவனாகவும் இருக்கிறேன். ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் அவர்களுடன் மிக நெருக்கமாகப் பழகியிருக்கிறேன். உறவினரும் கூட. காலமறிந்து தீரத்துடன் செயல் புரியும் இத்தகைய சைவ சீலர்களை அடிக்கடி நாம் நினைவு கூர்ந்து நன்றிக்கடனுடன், கடமை உணர்வுடன் எல் லோரும் வாழவேண்டுமென்பதே என் விருப்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவங் காத்த பெருங்குடி

[புலவர்மணி சோ. இளமுருகனார்]

## அறுசீராசிரிய விருத்தம்

### சிதம்பரச் சுப்பையச் செட்டியார்

மாற்றுநெறி யிருள்புகுந்து வளர்சைவ
மணிவிளக்கை மறைத்த காலை
நீற்றொளியுங் கண்மணியு மழியாமல்
நிலவுதற்கு நின்ற நோன்பால்
ஏற்றமிகு மரபிரண்டுந் தூயசிவ
மரபாகி யிருந்த தொன்மை.
சாற்றுமொரு பெருங்குடியிற் சிதம்பரசுப்
பையனெனும் சான்றோன் வந்தான்.

### செட்டியார் தவம்

சிவநெறியைப் புரப்பவரைத் திருநீற்றி
னொளிதிகழ்ந்து சிவத்தைக் காட்டுந்
தவநெறியைத் தருபவரைப் பொய்யுரைத்து
மதமாற்றந் தாங்கி வந்தார்
அவநெறிப்பே ரிருளகற்றி வைப்பவரை
யெங்குடியி லவத ரிக்கச்
சிவனேநின் னருள்வேண்டு மென்றழுதான்
பலநாள்கள் சிந்தை நொந்தே.

### நாவலரும் பசுபதிச் செட்டியாரும்

அவ்வமுகைக் கருள்செய்ய வுளங்கொண்ட
சிவனருளா லருமைச் சைவஞ்
செவ்வைமிகு துறைவிளங்கச் செந்தமிழ்நூ
லுரைவிளங்கச் செய்ய சீலம்
கவ்வையின்றிச் சிறந்தோங்கக் கலைவளர்
அக்குடியிற் கதிரோன் மான
உய்வருளும் நாவலனும் அறச்செல்வன்
பசுபதியு முதயஞ் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பெருமான்

நாவலன்செய் பெருந்தொண்டை நவிலுதற்குப்
பலகோடி நாவே வேண்டும்
பூவலஞ்செய் பகலவனும் நாளுமவன்
பொற்சிலையைப் போற்றிச் செல்வான்
தேவர்தொழுஞ் சீலத்தான் சிவநெறிக்கு
வரம்பாகித் திகழ வைத்தோன்
தூவளரும் அடிக்கமலம் முடிக்கணிந்து
முப்போதுந் துதித்து வாழ்வாம்.

## பசுபதிச் செட்டியார்

மற்றையவன் றன்மாமன் நாவலனுர்
அடிச்சுவட்டில் வாழ்ந்த சீலன்
வற்றுத கலைவளர்க்க வண்ணையிலே
கல்லூரி வயங்க வைத்தோன்
செற்றமிகு விலங்கரவஞ் செறிகாட்டிற்
பழங்கோயிற் சிதைவு தேடி
முற்றுத மதிக்கண்ணி யானுக்குப்
புதுக்கோயில் முடிந்த செல்வன்

வண்ணையிலே சைவபரி பாலனஞ் செய்
மாசபையை வளர்த்த செம்மல்
புண்ணியங்கள் பலபுரிந்தோ னிரவலர்க்குப்
புகலானேன் புலமை யோங்க
எண்ணுமொரு கட்டிடத்தைக் கொடைசெய்து
பரிசில்நிதி இலங்க வைத்தோன்
வண்ணையிலே யரசிருந்தோன் வணிகர் பிரான்
பசுபதிசீர் வாழி வாழி.

## சிதம்பரநாதச் செட்டியார்

தந்தைபுரி யறப்பணியைத் தளராமல்
வளர்ப்பதற்குத் தனயன் வேண்டும்
இந்தவகை நல்லுலக மியங்குமெனப்
பசுபதியா ரிறைஞ்சு நாளில்
வந்ததவத் தொடர்போடுந் தங்குடியின்
மாண்போடும் வண்மை யோடும்
சிந்துகட லெழுமதிபோற் சீரார்சிதம்
பரநாத னுதயஞ் செய்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றந்தை நிறுவியகல் லூரிதனி
லாங்கிலத்தை நயந்து கற்றுன்
பெற்றதிரு வுடையான்பா லருந்தமிழைப்
பெரிதுணர்ந்த பீடா ருண்மை
முற்றுணர்ந்த மெய்கண்டான் போதமென்னும்
முழுநூலை முடியக் கற்றுக்
கற்றபயன் சிவன்கழலைக் கும்பிடுத
லென்றவன்ருள் கருத்திற் கொண்டான்.

வன்மொழியே யறியாதான் நண்பருக்கும்
மற்றையோர்க்கும் வழங்கு மாற்றல்
இன்மொழியே தன்மொழியா யெடுத்துரைக்க
எல்லோரு மின்பங் கண்டு
வன்மொழியை யெவரிடத்தும் வழங்காது
மறந்தனரால் மாற்றிச் செய்கை
பொன்மொழியா யிந்நாளிற் றமிழ்ப்பண்பை
யழியாது புரந்த தம்மா

விருந்தினரைக் கண்டவுட னினியமுகங்
காட்டியுரை விரும்பிச் செப்பி
மருந்துநிகர் மொழிமடந்தை சேவிக்க
அமுதளிக்கும் மாண்பு மிக்கோன்
தருந்தந்தை யுரைசெப்பச் சென்றவழி
அடியேற்குத் தந்த தோசை
பெருந்துவையல் தாளிதஞ்செய் மோரன்பின்
சுவையின்னும் பேசப் போமோ.

சைவபரி பாலனஞ்செய் சபைக்காயு
ளுறுப்பினனுய்ச் சபைவி ளங்க
மெய்மையுறு பொருளனென மூவைந்து
வற்சரங்கள் வளர்த்த மேலோன்
தெய்வநெறிச் சாதனங்கள் வளர்வதற்குச்
செயலகத்தைத் திகழச் செய்தோன்
உய்வருளும் பிள்ளைதளி புதுப்பித்துக்
குடமுழுக்கு முஞற்றி வைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி மாணுக்க ரறிவியலிற்
புலமைபெறக் கருத்துக் கொண்டு
நல்லவரை யூக்கிநிதி தொகுத்ததுடன்
தன்னிதியும் நயந்து நல்கி
வல்லவரைக் கொண்டு தன்கண் காணிப்பி
லாய்கூடம் வகுத்த ளித்தான்
இல்லவரு முள்ளவரு மதிற்பயின்று
நாடெங்கு மிலங்கு கின்ருர்.

மாசில்லா விச்சபையின் பொருள் கொண்டு
தில்லையிலே மடமெ டுத்துப்
பாசநெடுங் கட்டறுத்தே யுயிர்க்கின்பம்
பாலிக்கும் பரம ஞர்க்குப்
பூசனைகள் நாடோறும் புரிந்துவர
வழிசெய்த புனிதன் மற்றுப்
பேசரிய வித்தொண்டு பேரறமா
யவன் நினைவைப் பேசு மன்றே.

திருத்தாதை கட்டுவித்த திருக்கேதீச்
சரத்தளியைத் திருத்தச் செய்யுங்
கருத்தாலே மதுரைவள ராதீன
முவந்தளித்த கனகங் கொண்டும்
அருத்திமிக வைந்துமதி யாங்குறைந்து
புதுக்கியத னமைதி கண்டு
திருத்தகநற் குடமுழுக்குஞ் செய்வித்தான்
பசுபதியார் சிந்தை போல.

இப்படியே சிவத்தொண்டு பலபுரிந்து
மில்லறத்தை யினித யர்ந்தும்
செப்பநின்ற வறுபத்து நாலாண்டுஞ்
சிந்தனைசொற் செயல்கள் நன்ருய்
அப்பனடிக் கிடைநீங்காப் பேரன்பா
லழுதுகண்ணீ ரார வேத்தி
ஒப்பில்சிவ பதமடைந்தான் தன்குலத்தார்
குறிக்கோளை யோம்பி நின்றே.

UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Donated by:
Mr K C. ULARATNAM

## தந்தகுடி வாழி

மைவிளங்குங் கண்டத்தான் மதிவிளங்குஞ்
செஞ்சடையான் மாண்பு பேசும்
மெய்விளங்குஞ் சிவநெறித்தா மரைபூத்து
விரைகமழ்ந்து மேன்மை காட்டப்
பொய்விளங்குஞ் சமயவிருள் போயகலப்
புத்துணர்வு புலரத் தோன்றி
உய்யவரு மொண்சுடரை யொப்பவரைத்
தந்தகுடி யுயர்ந்து வாழி.

---

## நடராசர் துதி

வையகமின் புறநின்ற
மருமலிபொற் பதம்போற்றி
கையவரு நிலைபோற்றி
கருணைமுக மலர்போற்றி
மெய்யிலகு மொளிபோற்றி
விரவியெனை யெடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி
திருச்சிற்றம் பலம்போற்றி.

## சிவகாமியம்மை - விருத்தம்

மன்றின்மணி விளக்கெனலா
மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணி
ஞெளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ்
சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி
நிலவுதிரு போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தீஸ்வரனின் பேரருள் பெற்ற சிவமணி

இற்றைக்கு 35 வருடங்களுக்கு முன்னர் சிவன்கோவிலில் தினந்தோறும் மாலையில் திருக்கேணியில் சந்தியாவந்தனம் செய்து சாயரக்ஷை பூசா காலத்தில் தரிசித்து திருமுறைகளை பக்திரசத்துடன் பாடிக்கொண்டு வரும் நியமனம் கொண்ட ஒரு சிவப் பேரன்பர் வண்ணை ஸ்ரீ சித.மு.ப.சிதம்பரநாதச் செட்டியாரவர்கள்.

யான் வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தைப் பொறுப்பேற்ற காலத்தில், இவ்வாலயம் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று, திருப்பணி வேலைகள் ஓரளவுக்கு ஸ்தம்பித நிலையையடைந்திருந்தது. எனினும் இவ் வேலைகள் யாவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு 1950-ம் ஆண்டு பெரிய அளவிலான மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வகையில் பல சைவப் பெரியார்கள் குறிப்பாக சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் எனக்குப் பக்கபலமாக இருந்து, ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவினதை இன்றும் என்னால் மறக்க முடியாது. எனது தந்தையார் ஸ்ரீ வைத்திலிங்கச் செட்டியாருடன் மிக நெருங்கிய நண்பரும் ஆவர். ஆகம விதிகளைப் பின்பற்றி ஆலய பரிபாலனம் செய்யும் முக்கிய விடயங்களில் செட்டியாரின் ஆலோசனைகள் பேருதவியாக இருந்தன என்பதை நான் நன்கு உணர்ந்து அவற்றைச் செயற்படுத்தியும் இருக்கிறேன்.

இவ்வாலயத்தில் ஸ்ரீ செட்டியாரவர்கள் கொண்டுள்ள ஈடுபாடு நிகரற்றது. கார்த்திகை முதற் சோமவார உற்சவத்தையும் திருக்கார்த்திகை உற்சவத்தையும் வருடந்தோறும் நியமமாக, விதிமுறைப்படி அன்னார் செய்து வந்த பணிகள் நன்கு போற்றப் படவேண்டியவை. 1932-ல் தனது ஒரே மகளின் கல்யாணத்தின் போது தனது குலதெய்வமாகிய தையல்நாயகிக்குத் திருப்பொற் தாலி அணிவித்த பின்னரே - தனது மகளின் மாங்கல்யதாரணம் செய்வித்தார். இதனாற்றான் போலும் அத்தம்பதிகள் நடராஜா-சிவகாமசுந்தரி இன்றும் சகல சௌபாக்கியங்களுடன் 57 வருடங்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் அவர்கட்குப் பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் பேரருள் பெற்றதுக்குச் சான்று அவர் - யமபயம், மரணாவஸ்தை என்பன இல்லாமல் அமைதியாக இறைவனடி சேர்ந்தார் என்பதே!

வை. கந்தப்பச் செட்டியார்
(அறங்காவலர், வண்ணை வைத்தீஸ்வரர் தேவஸ்தானம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22-12-1973 அன்று சைவ பரிபாலன சபை
நாவலர் மண்டபத்தில்

## ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியாரவர்களின்
உருவப்படத் திறப்பு விழாத்

# தொகுப்புரை

ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் அவர்களின் உருவப்பட திரை நீக்க விழா சபை மண்டபத்தில் 22-12-73 அன்று மாலையில் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமானது. சங்கீதபூஷணம் திரு. ஆர். நடராஜனின் திருமுறைப் பாராயணம் முடிந்ததும் சபைத்தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் செட்டியாரின் விசேட குணங்களையும் சைவப்பண்பாட்டையும் சமய சேவைகளையும் பாராட்டி விரிவாக எடுத்துரைத்து இத்தகைய பெரியார்களின் உருவப்படங்கள் சபை மண்டபத்தை அலங்கரிக்க வேண்டும் என்று கூறி நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களை உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைக்கும்படி கேட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தாம் மாணவனாக இருக்கும் போது இந்து சாதனத்துக்கும், இந்துக் கல்லூரிக்கும் ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் ஆற்றிய அரும் பெரும் தொண்டுகளை தாம் நேரிலேயே அறிந்து கொண்டதாகக் கூறிய நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்கள் அத்தகைய சிவதர்ம சீலரின் உருவப் படத்தைத் தாம் திறந்து வைப்பதில் பேருவகையும் பெருமையும் கொண்டுள்ளதாகக் கூறினர்.

இலக்கிய வரலாற்றில் சைவ சமயம் ஒரு முக்கிய இடத்தை கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ செட்டியாரவர்களின் சேவை மிகவும் போற்றப்படக் கூடியதும், பாராட்டப்படக் கூடியதும் எனப் பேராசிரியர் Dr. வித்தியானந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பொதுவாக நம்முடைய சமுதாயத்தில் எங்கள் முன்னோர் செய்த அரும் பெரும் தொண்டுகளை நாம் தான்தோன்றித் தனமாக மறப்பது வழக்கமாகி விட்டது. இன்றைய விழா நிகழ்ச்சிகளில் செட்டியாரின் சேவைகளை இன்றுயினும் நினைத்தோமே என்று உணரத் தோன்றுகின்றது; அவர் தம் தந்தையார் வழி நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியாரின் உருவப்படத் திரை நீக்க விழாவில் அமைந்த சில காட்சிகள்

1. நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றுகிருர்.

2. செட்டியாரின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்தல்.

3. அவைத் தலைவர் நம. சிவப்பிரகாசம் வீற்றிருத்தல்.

4. திரு. K. T. சம்பந்தர் கலாநிதி வித்தியானந்த னுக்கு மாலையிடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூன்று இந்து ஸ்தாபனங்களுக்கும் ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் செய்த அளப்பிலாச் சேவை பொன் எழுத்துக்களால் போற்றப்பட வேண்டியவை என்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

விழாவின் ஆரம்பத்தில் சைவசித்தாந்த கலாநிதி வித்துவான் கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்த்துப்பா இன்னிசையுடன் வழங்கினர்.

சைவ பரிபாலன சபைக் காரியதரிசி திரு. இரகுநாத முதலியார் அவர்களின் நன்றி உரையைத் தொடர்ந்து குணரட்ணம் சகோதரிகளின் திருமுறை இன்னிசையுடன் விழா இனிது நிறை வெய்தியது:

---

## தக்ஷிணாமூர்த்தி - விருத்தம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

## வைரவக்கடவுள் - விருத்தம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவப்பிரகாச...." வந்த கதை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இந்துசாதனம் ஆகிய இரண்டும் ஒரே ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவை. பல ஆண்டுகளாக இந்துசாதன காரியாலயம் இந்துக் கல்லூரியின் தென் பக்கக் கட்டிடத்தில் நடைபெற்று வந்தது. இந்துக் கல்லூரியில் மாணவர்கள் பெருந் திரளாக வந்ததனுல் இந்துசாதனத்துக்குப் பிறிதோர் இடம் தேட வேண்டியதாயிற்று. 1889 ஆம் ஆண்டிலேயே தோன்றிய ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் இந்துக்கல்லூரிக்குப் பக்கத்தில் இந்துசாதனம் நிறுவப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தில் பெருமுயற்சியில ஈடுபட்டார். இக்காலத்தில் வண்ணூர் பண்ணையில் வாழ்ந்து வந்த சைவசித்தாந்த வல்லுனரும் மகாவித்துவானும் பௌராணிகரும் ஆகிய ஸ்ரீ மாரிமுத்து வாத்தியாரிடம் நயமாகப் பேசி திரு. செட்டியார் அவர்கள் இப்போது இந்துசாதன ஆலயம் இருக்கும் காணியை வாங்கிச் சபைஆதரவுடன் பாரிய கட்டிடங்களை அமைத்து இந்துசாதனத் திறப்பு விழாவைத் திறம்பட செய்வித்தார். இதன் பிரகாரம் சைவப்பிரகாச இயந்திரசாலையும் இந்துசாதன பத்திரிகை ஆலயமும் ஒரே இடத்தில் கருமமாற்ற ஆரம்பித்தன.

தமிழ் நாட்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் தர்மங்களான சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை, சிதம்பரம் சேக்கிழார் கோயில், சென்னையில் வித்தியானுபாலன யந்திரசாலை மற்றும் தர்மங்களுக்குப் பொறுப்பாக திரு. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவருக்குப் பின் அவருடைய சகோதரர் புத்திரன் திரு. ச. விசுவநாதபிள்ளை அவர்கள் நாவலரின் தர்மங்களை பரிபாலித்து வரும் வேளையில் அவரின் மைத்துனரான திரு. செட்டியார் அவர்கள் பக்கபலமாக இருந்து நாவலர் எழுதிய நூல்களைப் பதிப்பித்து தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் வெளியிட்டு அருந்தொண்டாற்றினுர்.

சைவபரிபாலன சபையினர் புண்ணியநாச்சி தர்மத்தையும் நடாத்தி வருகிருர்கள். சிதம்பரம் நடராஜர் கோவிலில் உச்சிக் காலப் பூசையை நடாத்துவதற்கு இத்தர்மம் ஒழுங்கு செய்திருந்தது. இந்த உச்சிக்காலக் கட்டளை நியமமாக நடைபெற வேண்டும் என்ற பெருநோக்கில் புண்ணியநாச்சி தர்மத்தின் ஒரு தொகையை ஒதுக்கி சிதம்பரத்திலேயே மாலைகட்டித் தெருவில் ஒரு நிலத்தை வாங்கி யாழ்ப்பாண யாத்திரிகர்கள் அங்கு சென்று தங்குவதற்கான ஒரு கட்டிடமும் அமைத்து அதே நிலத்தில் நிரந்தரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துசாதன ஆலயமும் சைவப்பிரகாச அச்சகக் கட்டிடமும். ஸ்ரீ சிதம்பரநாதச் செட்டியார் அமைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் தரக்கூடிய முறையையும் திரு. செட்டியார் அவர்கள் செய்து வைத்தார்கள். இன்று சிதம்பரம் மேற்கு வீதியில் அமைந்துள்ள நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, மாலை கட்டித் தெருவில் உள்ள புண்ணியநாச்சி மடம், ஞானப்பிரகாசக் கரையில் உள்ள சேக்கிழார் கோவிலும் ஆனைக்குட்டி மடமும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய நினைவுச் சின்னமாக அமைந்திருக்கின்றன.

வடகோவை அ. சபாபதிப்பிள்ளை
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும்
முன்னைநாள் நாவலப்பிட்டி இந்து
சங்கத் தலைவரும்)

## முருகன் துதி

முழுமதி யன்ன வாறு
முகங்களு முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும்
அணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டான்
அவன்றவஞ் செப்பற் பாற்றே.

## சேக்கிழார் துதி

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னியி ருத்துவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

# சிவஞான வைரவர் சுவாமி ஆலய கும்பாபிஷேகம்

(பத்திரிகைக் குறிப்புகள் சில)

வீரகேசரி 10-4-89

கல்லூரி துரிதமாக வளர்ந்து கொண்டு போகுஞ் சமயத்தில் ஒரு தனிப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் தேவையாயிற்று. கூடத்தின் கட்டுவேலைகள் ஆரம்பமாயின. பெரியார் பசுபதிச் செட்டியாரின் மூத்தமகன் சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், கட்டிட வேலையில் எஞ்சிய கல்லையும் மணலையும், சாந்தையும், ஓட்டையும் பயன்படுத்திக் கூலியாட்கள் கூலிபெறாது உவந்தளித்த துணை கொண்டு கொண்டலடியிலே ஒரு சிறு கோயில் சமர்ப்பித்தார்.

இன்னுமொரு திருப்பணியைச் சிரமேற் கொண்டு தமது இன பந்துவாகியவரும் சிதம்பரம் திருப்பெருந்திரு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தர்மபரிபாலகராக அப்பொழுது இருந்தவருமான திரு. விசுவநாதபிள்ளையின் துணை கொண்டு இரு சிறு கருங்கல் சிலைகள் - ஒன்று வைரவ சுவாமியினது, மற்றையது விநாயகப் பெருமானினது தமிழ் நாட்டிலிருந்து தருவித்து தாம் உருவாக்கிய கோயிலிலே விதிமுறைப்படி நிறுவி வைத்தார்.

வண்ணை ந. சண்முகரத்தினம் பி. ஏ., பி. ஜி. டி.
(டிப்-இன்) ரீ. ஈ எவ். எல்,


உதயன் 10-4-89

''சிதம்பரநாதச் செட்டியார் செய்த பூர்வ புண்ணியத்தாலும் அவர் தம் முன்னோர் செய்த தவப்பயனாலும், விஞ்ஞான ஆய்வு கூடத்துடன் அதனருகே மெய்ஞானக் கூடமாகிய சிவஞான வைரவ சுவாமி கோயில் கல், மண், சுண்ணாம்பு முதலியவற்றால் கட்டப்பட்டு ஓட்டுக் கூரையுடன் கூடிய கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், முதலியன கொண்டு இனிது நிறைவேறியது. பின் சிதம்பரத்தில் இருந்து அரிதில் தருவிக்கப்பட்ட அருள்மிகு வித்யாகணபதி, அருள்மிகு சிவஞான வைரவ சுவாமி சிலா விக்கிரகங்களை அஷ்டபந்தன மருந்து சாத்தி புனர்ஆவர்த்தன மகாகும்பாபிஷேகமும் செய்து வைத்தார்.

சி. சிவகுருநாதன் (எம் ஏ., டிப்-இன்எடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னர் ஸ்ரீ செட்டியாரவர்களினால் கட்டப்பட்டு பின்னர்
அதே இடத்தில் புதிதாக அமைக்கப்பட்டு இவ்வருடம்
ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் செய்யப்பட்ட
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சிவஞான
வைரவ சுவாமிகோவிலின் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரன் பணி புரிந்த அன்பர்

சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம்



தூயவெண்ணீறு துதைந்த பொன்
மேனியுந் தாழ்வடமு
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு
நைந் துருக்கிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்
பதிகஞ் செஞ்சொன்
மேயசெவ் வாயுமுடையார் புகுந்தனர்
வீதியுள்ளே.

திருநாவுக்கரசு நாயனுரைத் துதித்து, சேக்கிழார் நாயனுர் பாடிய இத் திருவிருத்தத்தைப் படிக்கும் போது சைவப் பெரியார் திரு. மு.ப. சிதம்பரநாதச் செட்டியாரின் நினைவு ஒருவருக்கு வரும். மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயமான ஆனிடத்தைந்து மாடுமரண் பணிக்கு. பெறுதற்கரிய மனிதப் பிறவியை எடுத்தவர்கள் மனம், வாக்கு, காயமாகிய மூன்று உறுப்புகளினுலும் அரன் பணி புரிதல் வேண்டும். அதற்காகவே நமக்கு இச்சரீரம் கொடுக்கப்பட்டது. இப்பணியைச் செட்டியாரவர்கள் இடைவிடாது செய்தனர். செட்டியாரவர்கள் பரம்பரையாகச் சிவபூசை புரிந்து வந்த குடும்பத்தில் தோன்றியவர். அவரும் கிரமமாகச் சிவபூசை செய்து வந்தனர். ஒரு நாள் சிறியேன் அவரை வண்ணர்பண்ணைச் சிவன் கோவிலுக்கும் அவருடைய வீட்டுக்கு மிடையில் கையில் பிரசாதங்களுடன் சந்தித்த பொழுது ''இன்று சிவன் கோவிலில் ஒரு விசேஷ தினம்; அபிஷேகாராதனைகள் செய்து விட்டு வருகிறேன். இத் தொண்டை நமது முன்னேர்களுடைய சொத்தைக் கொண்டு செய்கிறேன். அவற்றுல் சேரும் புண்ணியம் அவர்களுக்கு. சுமைகூலி தான் நமக்கு'' என்று தாழ்மையுடன் கூறினுர்.

அவருடைய பிதா திரு. பசுபதிச் செட்டியார் செய்த அறப் பணிகளைச் செவ்வனே நடாத்துவதே அவருடைய வாழ்க்கையின் முக்கிய நோக்கமாயமைந்தது. அவையாவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) திருக்கேதீச்சரத் திருப்பணி
2) யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை
3) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இப்பொழுது மதுரையாதீனத் தலைவராகவுள்ள திருஞான சம்பந்த சோமசுந்தர தேசிகருடைய உதவியுடன் செட்டியாரவர்கள் 1953 இல் திருக்கேதீச்சரத் திருப்பணியைப் புதுக்கி மகாகும்பா பிஷேகம் செய்வித்தனர். திருக்கோயில் விடுதிக்குக் காலத்திற்குக் காலம் உதவி புரிந்து வந்தனர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையைத் தாபித்த பெரியார் களுள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர் அவருடைய தந்தையார் திரு மு. பசுபதிச் செட்டியார். அதன் சைவ தாபனங்களுள் முக்கி யமானவை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், சைவப்பிரகாச அச்சியந்திர சாலையுமாகும். செட்டியாரவர்கள் பூவுக்கு நறுமணம் சேர்த்திருப்பது போல் இவ்விரு தாபனங்களிலும் சைவமணங்கமழும் தொண்டுகளை வளர்த்து வந்தார்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் பிரசித்தி பெற்ற சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த யோகீஸ்வரரை அழைத்துச் சிறந்த கதாப் பிரசங்கங்கள் செய்வித்து, தமது தந்தையாரைப் போல இந்துக் கல்லூரித் திருப்பணிக்கும் உதவி செய்தார். இப்பொழுதுள்ள விஞ் ஞான கூடம் செட்டியாருடைய மேற்பார்வையில் கட்டப்பட்டது. காசியிலிருந்து ஒரு வைரவ விக்கிரகத்தைக் கொணர்ந்து அதனரு கில் ஒரு வைரவர் கோயிலையும் கட்டினர். முன்பு அவ்விடத்தில் ஒரு திருக்கொன்றையும் திரிசூலமுமிருந்தன. அக்கோவிலுள்ள எட்டுப் பரப்பு நிலமும் அவருடைய முயற்சியினால் கல்லூரிக்குச் சேர்ந்தது.

இப்பொழுது சைவ பரிபாலன சபைக்குச் சொந்தமான சைவப் பிரகாச அச்சியந்திரசாலை முன்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யின் முற்பாகத்தில் கல்லூரிக் கணித்தாகவுள்ள கீழறைகளில் அமைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விருத்திக்கு இவ்வறைகள் தேவைப்பட்டபடியால் சபையார் பிறிதோரிடத்தை தேடவேண்டியிருந்தது. செட்டியார் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியையும், சைவபரிபாலன சபையையும் புறம்பாக மதிக்கவில்லை; அவை சேயும் தாயும் போன்றவை. சபையார் சைவப்பிரகாச அச் சியந்திரசாலை நிறுவப்பட்டுள்ள நிலம் அவருடைய பெரு முயற்சியினால், பெருஞ் சிரமத்துடன் விலைக்கு வாங்கப்பட்டது. கட்டிடங்களும், அவருடைய மேற்பார்வையிலேயே பூர்த்தியாயின. இவ் அச்சியந்திரசாலைப் பிரவேசத்தை மிகவும் கோலாகலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறச் செய்தனர். சிவபூசாதுரந்தரர்கள் சிவபூசைசெய்தனர். பிரவேசம் நிகழ்ந்த பின் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த யோகீஸ்வரர் பக்திச் சுவைநிறைந்த கதாப் பிரசங்கங்களைத் தொடர்பாகச் செய்தார்கள். நவாலியூர் சோமசுந்தரப் புலவர் வாழ்த்துப்பா உதவினார்கள்.

இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குச் சொந்தமான நாவலராச்சிரம மண்டபத்துக்கு வித்திட்டவர் செட்டியாரவர்களே. 1940 ஆம் ஆண்டில் அவருடைய வீட்டில் சைவபரிபாலன சபையார் தொடங்கிய புராணப் படனமே மேற்படி மண்டபம் தோன்றுவதற்கு மூலமாக அமைந்தது. திருவருளின் செயலை யார் அறிய வல்லார். பின்பு நாவலர் ஆச்சிரம மண்டபம் முதலிய கட்டப்பட்ட பின் அவர் தமது பாரியாருடனும் பிள்ளைகளுடனும் வந்து கிருகப் பிரவேச விழாவை 1950 ஆண்டு சிவபூசை முதலிய கருமங்களுடன் நடத்தி வைத்தனர்.

சிதம்பர புண்ணிய நாச்சிமட தருமத்தைச் சைவபரிபாலன சபையாருடைய மேற்பார்வையில் கொண்டு வந்தவரும், சிதம்பரத்தில் புண்ணியநாச்சி மடமும், நிலமும் பிறரால் சுவீகரிக்கப்பட்ட காலத்தில் மடம் ஒன்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சிதம்பரம் மாலை கட்டித் தெருவில் ஒரு கட்டிடத்தை விலைக்குப் பெற்றுப் புண்ணிய நாச்சி மடமென வழங்க உதவியவரும் செட்டியாரவர்களே. சிதம்பர நடராஜப் பெருமான் மீது மிகுந்த பற்றுடையவர். வருடந்தோறும் சிதம்பர யாத்திரை புரிந்து சைவபரிபாலன சபையாரின் பெயரால் மார்கழித் திருவாதிரையிலன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்விப்பார். செட்டியார் வாழ்க்கை சைவ பரிபாலன சபையுடன் அத்துவிதமாகக் கலந்திருந்தது. சபையே செட்டியார், செட்டியாரே சபையென்று மக்கள் கணிக்கக் கூடியதாக அவருடைய சேவை அமைந்திருந்தது.

---

செல்வம் கல்லாதவரைக் கெடுக்கையாலும், வறுமை கற்றோரைக் கெடாமையாலும், கல்லாதாரிடத்து உண்டாகிய செல்வம், கற்றவரிடத்து உண்டாகிய வறுமையினும், மிகத்துன்பஞ் செய்வதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவசமிக்க தேர்க் காட்சி

1954 பங்குனி மாதத்தில் ஒருநாள் பிற்பகலில் வீட்டிற்குச் சென்றேன். சிறிது நோய்வாய்ப்பட்டிருந்த திரு செட்டியார் அவர்கள் என்னை நோக்கி இன்று கோவிலுக்குப் போகவில்லையா என்று வினவினார். யான் கோவிலில் இன்று என்ன என்று கேட்டேன். அவர் இன்று சிவன் கோவிலில் பஞ்சஇரதம் அல்லவா என்றுகூறிப்பெருமூச் செறிந்தார். அவருடைய உளப்பாங்கை அறிந்த நான் உடனே வெளியில் சென்று மோட்டார்கார் ஒன்றை கொண்டு வந்து அவரை சந்தியாவந்தனம் செய்யப்பண்ணிக் கோவிலுக்கு அழைத்துச் சென்றேன். அப்பொழுது வடக்கு வீதியில் ஐந்துதேர்களும் கெம்பீரமாக நின்று கொண்டிருந்தன. காரால் இறங்கி அணைத்தபடியே முதல் பிள்ளையார் தேருக்கு அழைத்துச் சென்றேன். விநாயகருக்கு ஒரு கும்பிடு. அடுத்தது சுப்பிரமணியர் தேர். அவருக்கும் ஒரு வணக்கம். அடுத்துநடுத்தேர் உமாசக்தி சமேதராக சோமாஸ்கந்த மூர்த்தி எழுந்தருளி இருக்கும் பிரதான தேர். அதற்குமுன் அழைத்துச் சென்றது மயிர்க்கூர்ச் செறிந்து பரவசம் கொண்டார். பல திருத்தாண்டகங்கள் அவருடைய நாவிலே தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தன. அவற்றில் திருவாரூர் தேர்க் காட்சியை நினைவுபடுத்திக் கொள்ளும் முகமாக அமைந்த திருத்தாண்டகம் இது.

உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியினுரு வெழுதி
உயிரா வணஞ்செய்நிட் டுன்கைத் தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
னருட்கண்ணா னோக்கா தா ரல்லாதாரே.

[பொருள்; உயிர்ப்ப இயங்காதபடி மூர்ச்சை அடக்கி ஒன்றுபட்டுத் தியானித்து உள்ளமாகிய படத்தின் வேருகாது நீயே ஆக அழுந்தி உயிரை அடிமையோலை எழுதி அதனோடு சிறிதும் பற்றின்றிக் கொடுத்தால், உன்னால் சிறப்பு வகையில் உணரப்படுவாரோடு உடனாய் விளங்கி நிற்பாய் (ஆகவே, உடம்பு நீங்கிய பின் தன்னோடும் ஒட்டி வாழச் செல்வான் இறைவன்) அயிராவணயானை ஏருது ஆன்ஏறு ஏறி தேவர் நாடு ஆளாதே திருவாரூர் ஆண்ட அயிராவணமே! என் அம்மானே! நின் அருட்கண்ணால் நோக்காதார் உனது பேரின்பத்தைப் பெறுதற்கு உரியவர் அல்லாதவரே.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1949 ம் ஆண்டு நிகழ்ந்த சைவபரிபாலன சபையின் வச்சிர விழாவின் போது அதன் நிர்வாகசபையினர் படம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரவச நிலையைத் தேரின் மீதிருந்த கோயில் பிரதம குருக்கள் பட்டர் ஐயா அவர்கள் கண்டதும் கீழ் இறங்கிவந்து செட்டியாருக்குத் தருப்பணம் அணிந்து விதிப்படி சங்கற்பம் செய்து அர்ச்சனை புரிந்து பஞ்சஹாரத்தி கற்பூர தீபம் காட்டி விபூதிப் பிரசாதம் வழங்கினர். இது வரைக்கும் அவருடைய நா சிவ நாமத்தைத் தவிர வேறெதையுமே உச்சரிக்கவில்லை. அடுத்து அம்மன் தேருக்குப் போகு முன் 'வைத்தீஸ்வரா என்னைக் காலனுக்கு காட்டிக் கொடுக்காதே' என்று அழுதுகுழறிய வண்ணம் அம்மன்தேரையும் பார்த்துக் கடைசியில் சண்டேஸ்வரர் தேரையும் பார்த்துத் தரிசித்துக் கொண்டு பின்னரும் எனது கைகளால் அணைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தோம். இதுவே அவர் கடைசியாகப் பார்த்த தேர்த் திருவிழாக் காட்சியாகும். எனக்கும் என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமும் கூட.

குஞ்சிதம்

---

உன் உள்ளத்திலே செல்வ மிகுதியால் அகந்தை தோன்றுமாயின், உன்னின் மிக்காருடைய செல்வத்தையும் வறுமை மிகுதியால் துக்கம் தோன்றுமாயின், உன்னின் இழிந்தாருடைய வறுமையையும் நினை; நினைப்பாயாகில், அகந்தை துக்கங்கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபதம் பெற்ற செம்மல்

1954-ம் ஆண்டு யான் இந்துக்கல்லூரியின் செட்டியார் போர்டிங்கில் விடுதிச்சாலை மாணவனுக இருந்தேன். ஆவணி மாதம் விடுமுறையின் பின்னர் வழக்கமாகக் காலையில் மணியோசையும் திருமுறை ஓசையும் பக்கத்து வீட்டில் கேட்கும். இந்த மங்கள இசைகளுடன் எம் அன்றுட விடுதிச்சாலை வாழ்க்கை ஆரம்பமாகும். ஒரு நாள் இரவு 7-30 மணி இருக்கும். பக்கத்து வீட்டில் ஏதோ அசம்பாவிதங்களுக்கான சலசலப்புக் கேட்டது. சில மாணவர்களும் நானும் வேலியைத் தாண்டி ஓடினேம். சிவந்த மேனியும் சைவப் பொலிவும் நிறைந்த ஒரு பெரியார் தனது பூஜை அலுமாரியைத் திறந்து அங்கு கோவில் கொண்டிருந்த நடராஜ மூர்த்தியைப் பார்த்து, "நடராஜா" காலனுக்குக் காட்டிக் கொடுக்காதே! உன் பாதத்தில் ஆடிய பாதத்தில், குஞ்சித பாதத்தில் என்னை ஏற்றுக் கொள்" என்று வேண்டிக் கொண்டு இனிய குரலில் எவ்விததளர்ச்சியுமில்லாமல்,

"ஐயுந் தொடர்ந்து விழியும் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாக விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்
செய்யுந் திருவொன்றி யூருடையீர் திரு நீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவும் கற்பியுமே".

என்னும் பாடலை மிக உருக்கமாகப் பாடிக்கொண்டு வீபூதியை நிறையத் தன் உடம்பெங்கும் பூசி கௌரி சங்கர உருத்திராக்க மாலையை அணிந்து கொண்டு ஒரு சிறிய தகரத்தில் அடைக்கப் பட்ட காசிசேஷீத்திர மண்ணைக் கீழே தூவி அதற்கு மேல் ஒரு தருப்பைப் பாயைத் தானுகவே விரித்து அதில் சாய்ந்து கொண்டு குஞ்சித பாதம் ஆடியபாதம் தேடியபாதம் அபயம் அபயம் என்று கூறிக்கொண்டேயிருந்தார். ஒரு சில விஞடிகளில் அவர் கண்ணை மூடினுர். ஐம்புலன்களும் ஒடுங்கி விட்டன. நான் முன் என்றுமே காணுத இக் காட்சியைக் கண்டு உடல் சிலிர்த்து மெய் மறந்து நின்றேன். பக்கத்தே நின்ற அவர் பத்தினியாரும் பிள்ளைகளும் மௌனமாக அமைதியாக கற்பூர ஆரத்தி செய்தார்கள், சிவபதம் என்ற பதத்துக்கு உண்மையான பொருளை அன்றுதான் உணர்ந்து கொண்டேன், செம்மல் சிதம்பரநாதச் செட்டியார் ஒரு சிறந்த சிவ பக்தர், பேரன்பர், இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், இந்துசாதன அலுவலாளர்கள் மத்தியில் இவரது ஈமக் கடன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிது நிறைவேற்றப்பட்டு இந்துசாதனத் தொண்டர்களால் உபகரிக்கப்பட்ட சந்தனச் சிதையில் அவரது பூதவுடல் சிவாக்கினியுடன் சேர்க்கப்பட்டது.

சிறந்த ஒரு பெரியாரை இழந்த கவலையை அவரது இறுதிச் சடங்குகள் யாவும் சிவமயமாகவே இருந்ததைப் பார்க்கும்போது உண்டான உள்ளநெகிழ்ச்சி வென்றது. எனது வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக இது திகழ்கிறது.

செ. பரஞ்சோதி

---

230.92
c/T
5

நாவை அடக்கி விக்கல் எழும் போது, ஒன்றைச் செய்தலே அன்றிச் சொல்லலும் கூடாமையாலும், அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல் இயலாமையாலும், மோஷத்திற்கு ஐதுவாகிய புண்ணியத்தை விரைந்து செய்.

நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன் உயிர்க்குப் பயன் படுவனவற்றைச் செய்யாது, வீண்நாட் கழிப்பது, ஐயையோ, எவ்வளவு அறியாமை!

250239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவாபிமானப் பிரபு"

(14-3-1906 அன்று வெளிவந்த இந்துசாதனத்தின் ஆசிரியத் தலையங்கம்)

சிறந்த சைவாபிமானப் பிரபுவும் பரம்பரைச் செல் வருமான ஸ்ரீபசுபதிச் செட்டியார் அவர்கள் சென்ற 2உ காலை நாம் இடையறு அன்புடன் பூசித்து வந்த நடராஜப் பெருமானின் குஞ்சி தபாத நிழலை அடைந்து விட்டனர். ஐயையோ! இப்புண்ணிய புரு ஷரைப் போல் கூர்ந்த விவேகமும், ஆழ்ந்த பக்தியும், மன உறுதி யுமுடைய ஒருவரை நாம் இனிக் காண்பதெனறோ!


வண்ணை நகரில் ஒரு பிரபல தனவந்தரான ஸ்ரீ முத்துக்குமாரச் செட்டியாரவர்கள் செய்த தவப்பேறென்ன அவர்க்கு மகவா யுதித்து உரிய காலத்தில் தமிழ்க் கல்வி கற்றபின் யாழ்ப்பாணம் மத் திய கல்லூரியிலும் பின் கும்பகோணம் கல்லூரியிலும் ஆங்கிலங் கற் றனர். இவரது தந்தையார் இவர் இளம்பராயமாயிருக்கும் போது சிவபதமடைந்து விட்டமையால், இவர் மேலுங்கல்லாது தமது தந் தையாரின் தொழிலை நடத்தி வந்தனர். இவர் தமது கல்வியை இடையில் விட்டுவிடாது கற்று வந்திருப்பரேல், இவருக்கு ஒப்பார் அல்லது மிக்கார் மிகச் சிலரேயாவர். இவர் இயல்பாகவே அதிக விவேகமுடையவர். கட்டடங்கள் அமைப்பதில் இவருக்கிருந்த திறமை சொல்லுவதற்கெளிதன்று.

செட்டியாரவர்கள் வண்ணார்பண்ணையிலுள்ள ஓர் சிறந்த குடும்பத்தைச் சார்ந்தவர். யாழ்ப்பாணத்திலே ஓர்பெரும் சிவநேசச் செல்வரும் தருமசீலருமாயிருந்த ஸ்ரீ சிதம்பர சுப்பையச் செட்டியா ரவர்கள் இவரது பேரனார். இத்தரும சீலர் ஊர்காவற்றுறையில் இந்தியாவுக்குச் செல்லும் யாத்திரிகர்களின் நலனுக்காக ஓர் மடங் கட்டுவித்து அதற்கு அதிக நிலம் வாங்கிவிட்டிருக்கின்றனர்; மேலும் பண்ணைத்துறை, அராலித்துறை முதலிய இடங்களிலும் இவர் மடங் கட்டி தண்ணீர்ப் பந்தல் நடாத்தி வந்தார்.

ஸ்ரீ பசுபதிச் செட்டியார் அவர்களின் முதலாவது சகோ தரியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் தமையனார் புத்திரர் ஸ்ரீ த. கைலாசபிள்ளை அவர்களும், இரண்டாம் சகோதரியைச் சிதம்பரம் சைவவித்தியாசாலைப் பிரதம உபாத்தியாயர் ஸ்ரீ பொன்னம்பலபிள்ளை அவர்களும் மூன்றாவது சகோதரியை இந்தியாவில் காட்டுத்துறை உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் கொழும்புத்துறை ஸ்ரீ குருநாதபிள்ளையவர்களும் விவாகஞ் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் முக்கிய ஸ்தாபகரான திரு. பசுபதிச் செட்டியாரின் உருவப் படத்தை 14-7-56 ல் சேர் கந்தையா வைத்திய நாதன் திறந்து வைத்து உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணுக்கருமாகிய காலஞ்சென்ற வித்துவ சிரோமணி ஸ்ரீமத் பொன்னம்பலபிள்ளை ஸ்ரீ செட்டியாரவர்களின் சிறியபிதா.

ஸ்ரீ பசுபதிச் செட்டியாரவர்கள் தன் முதியோரின் முன்மாதிரியைப் பின் பற்றிச் சிவபுண்ணிய தருமங்களிலே அதிக ஊக்கமும் சிரத்தையுமுடையவராய் விளங்கினர்: யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையும் அதன் மூலமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், இவ்விந்துசாதனப் பத்திரிகையும் இங்கு ஸ்தாபிக்கப்படுவதற்கு விஷேசித்த காரணமாயிருந்தவர் இவரேயாவர்: இவர்களின் விருத்தியின் பொருட்டே இவர் தமது பிந்தியகால முழுவதையும் செலவழித்ததன்றி அதிக பொருளும் இத்தரும தானங்களின் பொருட்டுச் செலவழித்திருக்கின்றுர்! முன் ஸ்ரீலஸ்ரீ நவாலரவர்களும் பின் அப்புக்காத்து ஸ்ரீமான் நாகலிங்கபிள்ளை, ஸ்ரீ பசுபதிச் செட்டியார் முதலிய பிரபுக்களும் தோன்றியிலரேல் யாழ்ப்பாணத்தில் சைவ சமய ஒளியானது மறைந்து போக, புறச்சமய இருளானது எங்குமிப்பொழுது மூடியிருக்குமென்பதற்கு ஐயமின்று:

ஸ்ரீ பசுபதிச் செட்டியாரவர்கள் திருக்கேதீச்சர விஷயத்திலும் அதிக சிரத்தையெடுத்தவர்; இப்புண்ணிய க்ஷேத்திரத்திரத்துக்குரிய நிலம் அரசாட்சியாரிடமிருந்து வாங்கப்பட்டபோது இவருக்கிருந்த ஆனந்தத்துக்கு அளவில்லை: இத் திருக்கேதீச்சரத்தின் முன் ஆலயம் கட்டப்பட்டிருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு இவரெடுத்த பிரயாசை மிகப் பெரிது:

ஸ்ரீ செட்டியாரவர்கள் மனத்தூய்மையும் சிவபக்தி விசுவாசமும் உடையவரென்பதை அவரது மரணமே நன்கு காட்டிற்று. சுக்கிரவாரமும் மாசிமகமுஞ் சேர்ந்த மகாவிஷேச தினத்தில் இறக்கும் பேறு புண்ணிய புருஷர்களுக்கன்றி மற்றையோருக்குக் கிடைத்தலரிது:

---

"In this facade, vast though it be. Sri Pasupathy Chettiar is a pillar That this pillar dossn't appear as the ones he himself created is no fault of his. It is Sri Lanka's that isn't as large as India or china. "

M. Karthigesan
Former Principal, Jaffna Hindu College.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Service Was His Slogan



*Mr. R. N. Sivapragasam*

*President, Saiva Paripalana Sabhai*

*&*

*Chief Editor, Hindu Organ.*

The story of the Saiva Paripalana Sabhai and the Saivapragasa Press is a continuous chapter of the convincing contribution of voluntary service by a few illustrious families of the North. among the leading benefactors, the names of Shri Pasupathy Chettiar and his worthy son Shri St. M. P. Sithambaranatha chettiar find places in the front rank. This reputed family has been exemplary in the observance of orthodox Saiva practice. Shri Pasupathy chettiar had the added virtue of close contact with his uncle, the Great Navalar. This accounts for the abiding interest taken by Shri Pasupathy Chettiar in establishing the Sabhai, Hindu Organ and the Jaffna Hindu College.

Shri Sithambaranatha Chettiar maintained the lofty tradition by continuing the good work of his revered father and functioned as Treasurer of the Sabhai and Honorary Managar of the Press. The imprint of the valuable services of this saiva devotee can be still seen in the foundations he had laid for the future and fruitful growth of the Hindu Organ and the Jaffna Hindu College. A portrait of such a sincere Saiva worker will certainly adorn the premises of these establishments.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்ப விஞ்ஞான கூடம்.
உயர்திரு. செட்டியார் அவர்கள் கட்டியது.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WE HONOUR HIM

*Mr. Justice V. Siva Supramaniam.*

During his life time, Mr. St. M. P. Sithambaranatha Chettiar followed in the footsteps of his Father, the revered Pasupathy Chettiar one of the Chief Founders of the Jaffna Hindu College and of the Saiva Paripalana Sabhai and worked with Indefatigable zeal for the progress and development of the Sabhai, the Hindu Organ and tha Hindu College. The Science Laboratory of the Jaffna Hindu College and the Saiva Prakasa Press building stand as momuments to his singular devotion to the causes of Education, Saiva Religion and culture. Whatever he did, he did without ostentation and without the expectation of any reward. Selfless men of his stamp are rare in any generation and we, in honouring such a man, honour ourselves.

It is with much pleasure that I have learnt that the Saiva Paripalana Sabhai has made arrangements to have the portrait of Mr. Chettiar unveiled in its premises at Vannarponnai. This is a very fitting acknowledgement of the invaluable services rendered by Mr. Chettiar to the Sabhai.

---

"Sri. Sithambarnatha chettiar was a member of the board of directors of the Jaffna Hindu College, archited of the College Science Laboratory, the Vairava Temple; Treasurer and later Vice President of the Saiva Paripalana Sabhi, Hony: Manager of the Saiva Prahasa Press and soleby responsible for the design and execution of the present Hindu Organ buildings."

Hindu Organ Editorial of 12. 3. 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A GREAT NAME IN THE HINDU ORGAN

*Mr. R. N. Sivasambu*

(Former eminent journalist in Malaya and India)

The seivices of Mr. St. M P. Sithambaranatha Chettiar to the Hindu Organ and Saiva Paripalana Sabhai for long years are so extensive and immense that it is difficult for one to compress them into a few lines for publicatien in a booklet. However, as one who had been associated with him for a long time from *1907* to *1952* I derive some pleasure in recording my tribute to him, though for the last few years age had restrained me from handling in such activites of my early life.

When I called at the small office of the Hindu Organ in the Southern wing of the Jaffna Hindu College in *1918*, it was a gruff voice that waved my younger brother R. N. Sivaprakasam then a school boy, It was Mr. Chettiar sit ing there in a crowded room with other members.

Later in *1946* and *48* when I happened to be in Jaffna we met each other regularly and he urged me to join the Hindu Organ for more active work. Howeve:, he took great interest to encourage my brother joining the Hindu Organ.

I feel greatly honourd to write a few lines about Mr. Chettiar, though I find it difficult now to sit down for such purposes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு. சி. பசுபதிச் செட்டியார் அவர்கள்

அருமைப் பேரனார், தந்தையாரைப் போலவே திரு. சி. பசுபதிச் செட்டியார் அவர்களும் சைவபரிபாலன சபையில் நீண்ட நாள் பொருளாளராகவும் சைவப்பிரகாச அச்சகத்தின் கௌரவ அதிபராகவும் தொண்டாற்றினார். யாழ்ப்பாணப் பட்டினப் பகுதிக்கு விவாகப் பதிவுக்காறராக கடமையாற்றிய இவர், திருக்கேதீஸ்வரம், வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மகா கும்பாபிஷேக வைபவங்களில் பெரும் பங்கு கொண்டு உழைத்தவர். 1958 ல் தனது 47 வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. சி. பாலசிங்கம் [illegible] அவர்கள்**

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] 1953 ம் ஆண்டு 47 வது வயதில் [illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Culled From Excerpts

He smiled to conquer He bided his time with patience to convince and convert. He spoke very little to wind and this little was born of unquestioned sincerity and of abounding goodwill. These characterised the conduct of Mr. Sithambaranatha chettiar during a half century of his public life. Any important event in the Hindu Organ was unthinkable without chattiar's presense and advice. He was the encyclopedia of the Saiva Paripalana Sabhai. He was the reference library to those in the Hindu Organ office "

M. Kathiravalu, former asst. Editor,
Hindu Organ

★ ★ ★

" Born into life in the lap of luxury, and opulence, Mr. Chattiar had lived discarding ease and indolence. He had talked with crowds and kept his virtues, walked with kings and never lost the common touch. He thereby became my, " Guide, Philosopheh and friend. To me Sivagangai at Chidamparam was an insanitary, dirty, greenish coloured, germ-infested pool. to Mr. Chettiar it contained holy waters and he bathed in and performen Sivapooja on its bank.

Muhandiram (Dr) E. P. Rasiah, J. P.

★ ★ ★

சைவ பரிபாலன சபையின் உய்வை உள்ளளவுங் கருதி ஊக்கமுடன் உழைத்த பெருந் தொண்டர் திரு. சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் சபையின் பொருளாளராகவும், உபதலைவராகவும், அச்சக அதிபராகவும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையில் இயக்குனராகவும் பல ஆண்டுகள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் வகையில் அன்னாரின் உருவப்படத்தை சபை மண்டபத்திலே திரை நீக்கஞ் செய்ய நிச்சயித்துள்ளனர்.

இந்துசாதனத் தலையங்கம், 21 - 12 - 73.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பசுபதிச் செட்டியாரவர்களின் தன்னலமற்ற சிந்தையையும் சேவையின் திறத்தையும் பின்பற்றி அவர்தம் புதல்வர் ஸ்ரீ சிதம்பர நாதச் செட்டியாரர் அவர்களும் இத் தாபனங்களில் பெரும்பங்கு கொண்டு உழைத்தவர் இப்போதிருக்கும் இந்துசாதன ஆலயத்தை உருவாக்கும் பணியைத் திறம்பட நிறைவேற்றினர்''.

— உயர்திரு. C. அருளம்பலம் M. P.
22 12-73.

★ ★ ★

''தொண்டர் சீர் பரவுதல் சைவத்தின் தனிப்பெரும் பண்பு. உயர்திரு. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் தொண்டர்க்குத் தொண்டர். அவரை தமிழ்த்தாய் வாழ்த்துகிருள். சிற்றம்பலவன் அகமிக மகிழ்ந்து ஆசி நல்குகிருன்''

— திரு இ. சபாலிங்கம்,
அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

★ ★ ★

" 1951 ம் வருடம் திருக்கேதீச்சர ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகாகும்பாபிஷேகம் திருவருளால் பொலிவுற்ற போது உயர்திரு சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் செய்த அரும் பெரும் சேவையை இலங்கையில் உள்ளவர்கள் என்றும் மறக்க முடியாது ".

— மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் குருமகா சந்நிதானம் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாசாரிய சுவாமிகள்

★ ★ ★

'' Mr. Sithambaranatha Chettiar made indefatigable efforts towards the restoration of the ancient shrine, Thiruketheeswaram like his revered father His devotion and his resourses were lavishly spent. His invaluable advice was always sought by the committee of the Thiruketheeswaram Restoration society of which he was vice - President for some time''

S. Sivasubramaniam, former Secretary,
Thiruketheeswarm Society and proctor Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Whenever I met Mr. Chettiar I felt that he had come out of the pages of the Peria Puranam. His golden mien was a clear indication of his Vaisya Varna, with probably an Aryan almixture. This cheerful face beaming with smiles and with all emblems of the Saiva faith made one feel that there was something deeper within him, than one can see on the surface, a TEJAS' that was the result of his frequent contacts with his creator, the lord of Thillai"

Sri Siva U. Somasegaram,
Retd. Director of Education

★ ★ ★

It is the duty of the Hindu Organ to place on record the deep debt of gratitude which it owes to Mr. St. M. P. Sithambaranatha Chettiar whose services to the Hindu Organ are no less valuable then those of his illustrious father, Mr. Pasupathy Chettiar to the Jaffna Hindu College."

Hindu Organ Editorial of
21-11-1928

---

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளை மற்ருெருவனை நோக்கி, "சிநேகிதனே, நீ கடவுள் இருக்கின்ற இடத்தைச் சொல்வாயாகில் உனக்கு ஒரு மாம்பழம் தருவேன்," என்ருன். அதற்கு அவன், "தோழா, நீ கடவுள் இல்லாத இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு இரண்டு பழம் தருவேன்." என்ருன். இவர்களிற் பின் கேட்டவன் புத்தி பெரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசெட்டியாரவர்கள் தமது நித்திய சிவபூஜையின் போது கசிந்துருகப் பாடும் சில

# திருமுறைகள்

## திருக்காளத்தி

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தா னிமையவர்தஞ் சிரத்தின் மேலா
னேழண்டத் தப்பாலா னிப்பாற் செம்பொன்
புனத்தகத்தார் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையா னெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணுளானே

## திருவாரூர்

கருவாகிக் குழம்பிலிருந்து கலித்துமூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோகாரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறிந்தொருகாற் பிறப்புண்டேன் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே.

## திருவாவடுதுறை

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேயென் னுறவேயென் னூனேயூனி
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய் வல்வினைநோ யடையா வண்ணம்
மாவடுதண் டுறையுறையு மமரரேறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றே னெழுத்தஞ்சு மென்றுனுவின்
மறவேன் றிருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வ மெண்ணு நாயே
னெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
மேற்றுனீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளுநாளும்
ஆற்றே னடியேனை யஞ்சே லென்று
யாவடுதண் டுறையுறையு மமரரேறே.

## திருவாரூர்

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பி னின்சுவையைத் தெளிந்த தேறற்
குருமணியைக் குழன்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணியானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தி லருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே.

## பொது

அப்பநீ யம்மைநீ யைய னுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ னீயே:

## திருப்புள்ளிருக்கு வேளூர்

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்க டீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில்

பண்: குறிஞ்சி திருமுறை: 7

மடித்தாடு மடிமைக்க ணன்றியே
மனனேநீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்திற் றமருகமு
மெரியகலுங் கரியபாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றே:

## மாணிக்கசுவாமிகள் அருளிய

## திருவாசகம்

திருப்பெருந்துறை திருச்சதகம் திருமுறை

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்து
மிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன்னருள பெறுநா ளென்றே வருந்துவனே;

## சம்பந்தர் தேவாரம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவ மென்கொலோ:

## சுந்தரர் தேவாரம்

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகருள்
பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன் எனை ஆள்வான் திருக் கேதீச்சரத்தானே:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர் தேவாரம்

புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைமே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்றருள்
செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே:

## திருநாவுக்கரசர் தேவாரம்

மாதர்ப் பிறைக் கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதல் மடப் பிடியோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப் பாதம்
கண்ட றியாதன கண்டேன்:

## சம்பந்தர் தேவாரம்

உண்ணாமுலை உமையா ளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

## சம்பந்தர் தேவாரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்தசடைமுடி எம்பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாம் இருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கும் வேளூரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர் தேவாரம்

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள் செய்தார்
தூமாமழை நின்றதிர வெருவித்
தொறுவின் னிரை யோடும்
ஆமாம்பிணை வந்தணையும் சாரல்
அண்ணா மலையாரே.

## சுந்தரர் தேவாரம்

ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதனைய அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானை
சிந்திப்பார் அவர் சிந்தையுள்ளானை
ஏலவார் குழலாருமை நங்கை
என்று மேத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்ப னெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

## திருநாவுக்கரசர் தேவாரம்

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை என்மனத்தே வைத்தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லியலின் பண்புகளை பெருமைப்படுத்திய இல்லத்தரசி



இளமையிலே செல்வத் திருமகளாய் திருநெல்வேலி மாவட்டத்தில் வனபரிபாலன அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. V. S. குருநாதபிள்ளை அவர்களுக்கும் திரு. பசுபதிச் செட்டியாரின் சகோதரி அன்னபூரணிக்கும் ஏக புதல்வியாக உதித்த திருவேங்கடவல்லி அம்மையார் பால்ய பருவத்திலே தாயை இழந்து தந்தையாருடன் சீரும் சிறப்புமாக தென்னிந்தியாவில் பல பகுதிகளில் குன்றுகள், நதிகள், குளங்கள் மீது விளையாடியும் நீந்தியும் ஜமீந்தார் மாளிகைகளில் தாயற்ற நிலையையும் மறந்து மிக மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். தந்தையாரின் ஓய்வுக் காலமும் இவரின் மங்கைப் பருவமடைந்த காலமும் ஒரே நேரத்தில் நிகழ்ந்ததால் இவர்கள் யாழ்ப்பாணம் திரும்பவேண்டியதாயிற்று. மாமன் மகன் திரு. சிதம்பரநாதச் செட்டியார் திருவேங்கடவல்லி அம்மையாருக்கு மாங்கல்ய தாரணம் செய்து தனது இனிய மனையாளாக வரித்துக்கொண்டார்.

இல்லற வாழ்க்கை இனிதே ஆரம்பமானது. செட்டியாரவர்களின் உயர்ந்த பண்புகளையும் சைவாசார மரபுகளையும் நன்கு உணர்ந்து வாசுகிபோல வாழ்ந்து இல்லறத்தில் உயர்ந்த நல்லறத்தைப் புரிந்து வந்தார்கள். செட்டியாரவர்கள் அடிக்கடி திருத்தல யாத்திரைகளை மேற்கொள்ளும்போது அம்மையாரும் உடன் செல்வார்கள். ஆண் கடலும் பெண் கடலும் சங்கமித்து மோதும் சேது முனையில் (1957 ஆம் ஆண்டு புயலின்போது இம் முனையைக் கடல் விழுங்கிவிட்டது.) சூரியோதயவேளையில் அம்மையார் சேது மண்ணிலே சிவலிங்கம் அமைத்துக் கொடுக்க செட்டியாரவர்கள் சிவபூஜை செய்யும் நிகழ்ச்சியுடன் இவர்களது தல யாத்திரை ஆரம்பித்து காசியில் கங்கா ஸ்நானம், விசுவநாதர் தரிசனம் செய்து அலகபாத் திருவேணி சங்கமத்தில் புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கா தீர்த்தத்தை எடுத்துவந்து இராமேஸ்வரத்தில் இராம லிங்க சுவாமிக்கு அபிஷேகம் செய்வித்ததும் யாத்திரை இனிது நிறைவேறும். அம்மையாருக்கு மிகப் பிடித்தமானவை, இராமேஸ்வரத்தில் சாத்தியாமிர்த தீர்த்தம், காசிகங்கை, திருக்குற்றாலம் நீர் வீழ்ச்சி, சிதம்பரம் சிவகங்கை, திருக்கேதீஸ்வரப் பாலாவித் தீர்த்தம். இவற்றுள் பலமணிநேரம் நீராடும் சுபாவம் அவருக்குண்டு.

தமிழும், சைவமும், ஆங்கிலமும், கணிதமும் சிறு பராய முதல் வீட்டிலேயே இவருக்குக் கற்பிக்கப்பட்ட நிலையிலும் தனது பிள்ளைகளை கல்வியில் மேன்மையுறச் செய்ததோடு தம் குடும்ப மரபுக்கேற்ப வேளாண்மை, விருந்தோம்பல் முதலியவற்றை நன்கு பேணி வைதீக சைவாசாரத்துடன் இறுதிமூச்சுவரை சகல பேறுகளுடனும் வாழ்ந்தார். திரு. செட்டியாரவர்கள் மேற்கொண்ட அநேக சைவ நற்பணிகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து அவற்றை இனிது நிறைவேறச் செய்த சிறந்த இல்லத்தரசியாக அமைந்திருந்தது போற்றுதற்குரிய தன்றே!

பொதுப் பணிகளிலும் திருமதி திருவேங்கடவல்லி அம்மையார் பல வகைகளில் ஈடுபட்டிருந்தார். சைவப் பெண்களுக்கு தனியாக ஒரு கலாசாலை அவசியமென பல சைவ அன்பர்கள் 1945 ஆம் ஆண்டு கஸ்தூரியார் வீதியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியை ஆரம்பித்தார்கள். சேர். W. துரைசாமி அவர்களின் தலைமையில் நிகழ்ந்த இக்கல்லூரியின் ஆரம்ப விழாவின்போது திருமதி திருவேங்கடவல்லி அம்மையார் ஐயாயிரம் ரூபாவுக்கான காசோலையை நன்கொடையாக வழங்கி அக்கல்லூரி திறம்பட இயங்கத் தம்மாலான பணிகளைச் செய்து வந்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

— சுந்தரி நடராஜன்

---


## வண்ணை வைத்தீஸ்வரர் தேவஸ்தானம்

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலுள்ள அத்தனை உற்சவ மூர்த்தங்களும் சிறந்த கலையம்சம் உடையவை. மிக அழகானவை. பங்குனி மஹோற்ஸவத்தில் எழுந்தருளிவரும் பஞ்சமூர்த்திகள், சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், நடராஜர், பிக்ஷாண்டவர், நால்வர் முதலியவைகளும், ஆடி மஹோற்ஸவத்திலும் சுக்கிலவார உற்ஸவத்திலும் எழுந்தருளும் இராஜராஜேஸ்வரி அம்மனின் திருவுருவமும் அழகும், அருளும் மிக நிறைந்துள்ளதாக இருக்கின்றன. இலங்கை, இந்திய சிற்பக் கலைஞர்களில் அநுபவமிக்க கைவண்ணத்தில் சென்ற நூற்றுண்டில் அமைக்கப்பெற்றன. இவ்வுற்ஸவ மூர்த்திகளில் சிலவற்றை மாத்திரம் இம் மலரில் வெளியிடுவதில் பூரிப்படைகிறோம்.

— தொகுப்பாசிரியர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுப்பிரமணியர் உற்ஸவ மூர்த்தி

சோமாஸ்கந்தர் உற்ஸவ மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திரசேகரர் உற்ஸவ மூர்த்தி
கல்யாணசுந்தரர் உற்ஸவ மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விநாயகர் உற்ஸவ மூர்த்தி
இராஜஇராஜேஸ்வரி உற்ஸவ மூர்த்தி

250239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பும் சீலமும் நிறைந்த பெருந்தகை

கல்லூரியில் நான் கல்வி கற்கும் போதே மகா பாரதத்தை துழாவித் துழாவி நன்கு ரசித்து வாசிக்கும் வழக்கமுடையேன். இந்நூலில் வரும் மூன்று பாத்திரங்கள் எனக்கு மிகப் பிடித்தமானவை: அவையாவன கர்ணன், கிருஷ்ணன், பீஷ்மர். கொடைக்குக் கர்ணன், மாயலீலைகளுக்கு கிருஷ்ணன். ஆனால் பீஷ்மரோ "செயற்கரிய செயலைச் செய்தவர்" என்று ஸ்ரீ இராஜாஜி 'பீஷ்மர்' என்ற சொல்லுக்கு விரிவுரை கூறுகிறார். பீஷ்மர் என்ற பாத்திரம் தோன்றியிரா விட்டால் மகாபாரதம் உருப்பெற்றிருக்காது என்ற நிலையில் அவர் ஒரு கர்ம வீரனாகவே தோற்றுகிறார்.

வண்ணார்பண்ணையில் 1889 - 1954 காலத்தில் வாழ்ந்து வந்த உயர்திரு சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் அவ்வூரில் மிகச் செல்வமான குடும்பத்தில் தலைமகனாகத் தோன்றினார் ஏராளமான வயல் நிலங்கள், காணிகள், கிட்டங்கிகள் அவருக்கு இருந்த போதும் மிக எளிமையான ஆடம்பரமற்ற வாழ்க்கையை மேற்கொண்டார். சைவ நலன் கருதி அநேக பணிகளில் தாமாகவே முன்வந்து செயல்படுத்தினார். முன்னோர் தேடிய சொத்து சுகங்களை அறப்பணிகளுக்கும் செலவிட்டார். நாலுமுழ வேட்டி ஒரு துண்டு, கழுத்தில் உருத்திராக்க மாலை இவற்றுடனே அவர் எங்கும் நடமாடினார். நியமந் தவறாது செய்து வந்த சிவபூஜையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபாகவே கூஷார்ச்சனை செய்து பூர்த்தி செய்தவர். ஆலயங்களிலே சிவநாமத்தை சமஸ்கிருதத்திலும் திருமுறைகளைத் தமிழிலும் பாராயணம் செய்யும் நியமம் உடையவர். தனக்குப் பின்னர் ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி நிற்கும் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க அரும்பாடுபட்டவர். தனக்கென வாழாது மற்றவர்களை வாழ வைத்த ஒரு அரும் பெரும் தீரன். சீரிய நெறியில், நாவலர் வழியில் சைவத்தைப் பரப்பிய பண்பாளன்.

என் வாழ்க்கையைப் பெருமளவு நெறிப்படுத்தியது சாரணீயமே. இச் சாரணீயத்தின் தந்தையான லோர்ட் பேடன் பவல் தாம் இறுதியாக உலக மக்களுக்கு விடுத்த செய்தியில் "நீங்கள் பிறக்கும் போது கண்ட சமுதாயத்திலும் பார்க்க உன்னதமான சமுதாயத்தை உருவாக்கினீர்கள் என்ற பூரண மன நிறைவுடன் இவ்வுலகத்தை விட்டுச் செல்லுங்கள்" என்று கூறி விண்ணுலகெய்தினர்.

உயர் திரு செட்டியாரவர்களும் உண்மைச் சாரணனாகவும் சைவநற் சீலனாகவும் வாழ்ந்து வந்தார் என்பதில் ஐயமுண்டோ!

எம். நகுலேஸ்வரன்

---

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் தூண்டுதலின் விளைவாகத் திரு. பசுபதிச் செட்டியாரவர்கள் அந்நிய படையெடுப்புக்களால் தரைமட்டமாயிருந்த திருக்கேதீச்சரத் தலத்தைக் கண்டுபிடித்தார். இலங்கையிலுள்ள இந்து சமூகத்தினதும், இந்து ஸ்தாபனங்களினதும் நிர்மாண சிற்பியாக விளங்கிய பசுபதிச் செட்டியாரவர்களின் சேவை மறக்கற்பாலதன்று."

சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் நீதி வாக்கியங்கள்

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனுல் எய்தும் பயனையும், உனக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசாரியார் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால் அவரை ஒரு காலமும் மறவாதே.

ஈசுரபக்தியும், நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும் தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவை யாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது

சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.

தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரம் அன்றி பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப் படுகின்றவர்களே உத்தமர்.

எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவு உடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியா திருந்தென்!

தன் பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமோ மிக இழிந்தது.

அறிவும் அதனுல் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனுய் இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல் கூடும்; நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது.

சுசியுடைமை சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், மனசுக்கு இதத்தையும் வளர்விக்கும்.

நீ பிறக்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யு முன், அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்து கொள்.

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றே யாயினும், தீதே யாயினும். அதுவே பெரும்பான்மையும் மரண பரியந்தம் அவனைத் தொடரும்.

நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள், முறையே பெரும்பான்மையும், நமது நற்சார்பு தீச்சார்புகளால் ஆகும்.

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது, பிறர் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்வோ மாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்ள மாட்டோமே.

நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல் வேண்டும்; பயில்வோமாகில், மேலே பெருந் துன்பங்களையும் சகிக்க வல்லவர் ஆவோம்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

மனத்திருத்தியிலும், சரீராரோக்கியத்திலும், நற்குண நற்செய்கைகளை உடையராய் வாழ்தலிலும் அன்றி, திரவியத்திலே இன்பம் ஜனியாது;

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாத பொழுது செல்வராவார் ஒருவரும் இலர்; அது உள்ள பொழுது வறியவராவார் மிக அரியர்:



250239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

பட்டப் படிப்பின் பின்னர் வரலாற்றுரீதியிலான மகாநாடு களிலும் வேறும் பல கருத்தரங்குகளிலும் லண்டன் மாநகரத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பைப் பெற்ற பின், இத்தகைய பெரியார் களின் சேவைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் இதுவே முதலாவதாகும். இத்தனைக்கும் என்னை இவ்வழியில் நெறிப் படுத்தி, வரலாற்று ஆய்வு முறைகளை மிகச்சிறப்பாக எடுத்துக் கூறி இத்தகுதிக்கு ஆளாக்கிய பெருமை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி S. பத்மநாதன் அவர் களும் வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி S. K. சிற்றம் பலம், விரிவுரையாளர்களாகிய திரு P. புஷ்பரத்தினம், திரு. M. திருநாவுக்கரசு, திரு S. கிருஷ்ணராஜா, செல்வி. கல்யாணி நாகராஜா திருமதி. S. கிருஸ்ணகுமார் முதலிய பேரறிஞர்களையே சாரும். இவர்களெல்லோருக்கும் முதற்கண் என் குரு அஞ்சலி யையும், நன்றியையும் மனமுவந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூற்றுண்டு ஜயந்தி மலர் ஒரு தொகுப்பு மலராகவே அமைந்து விட்டது. அவ்வப்போது உயர்திரு. செட்டியாரவர்களை நேரில் அறிந்த அறிஞர்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக தெரிவித்திருந்த கருத்துக்களும் வேறும் பல பெரியார்களின் குறிப் புரைகளும் இம் மலரில் சேர்க்கப்பட்டுள்ளன. செட்டியாரவர்களின் வரலாறு, அவர் புரிந்த தொண்டுகள் தொடர்பான சில புகைப் படங்களும், அவர்தம் வாழ்நாளில் இடையறுது வழிபட்டு வந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலுள்ள சில முக்கிய மூர்த்திகளின் புகைப்படங்களும் இம்மலரில் சேர்க்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கெல்லாம் ஆதரவாக இருந்த கட்டுரையாளர்களுக்கும் பழையபடங்களை சீரமைத்துப் புதுக்கித்தந்த ரூபி ஸ்ருடியோ ஸ்தாபனத்தாருக்கும், புளொக்குகளை அழகுற அமைத்துத்தந்த சித்ராலய நிறுவனத்தாருக்கும், இந்த வகையில் மிகச் சிறப்பாக அச்சேற்றித்தந்த சைவப்பிரகாச அச்சக அதிபர், அலுவலர் முதலானோருக்கும் — எனக்கு எல்லா வகையிலும் ஆலோசனை கூறி ஊக்குவித்த சித்தாந்த கலாநிதி, வித்துவான் க. கணபதிப்பிள்ளை அவர்கட்கும் எனது உள்ளங்கனிந்த நன்றியைக் கூறி, எனது உடன் பிறந்தோரின் ஆதரவில் இவ் ஜயந்தி மலரை மகிழ்வுடன் வெளியிடுகின்றேன்.

நன்றி - வணக்கம்.

மு. உமாசங்கரி

UNIVERSITY OF JAFFNA LIBRARY

---

அட்டைப் படம்

உதய ஞாயிறு, உஷத்காலம், உன்னத காட்சி
அமைதியான கம்பீரம், ஆண்டவன் குடிகொண்ட
ஆலயவாயில்
அடியார் நெஞ்சிலும் ஆண்டவன் கோயிலிலும்
ஐயனின் நடனக்கோலம் — அழகுச்சிலை — குனித்த புருவம்
கொவ்வைச் செவ்வாய் - குமிண் சிரிப்பு - பவளம் போல் மேனி
இனித்தங் கசிய எடுத்த பொற்பாதம் — இத்தனையும்
காண்பதற்கென்றே ஒரு பிறவி எடுக்கலாம் போலிருக்கிறதே!
ஆமாம்! அன்று அருள் மணி சொன்னதில் தவறென்ன?
அவன் அருகே —
அன்னை சிவகாமசுந்தரி, அகிலத்தை ஆட்டி
வைக்கும் லோகமாதா, ஜகஜ்ஜனனி !

University of Jaffna
250239
Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated :-
Mr. ... ...RATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## My Gratitude

This compilation seeks to understand the life and works of the late Mr. St. M. P. Sithambaranatha Chettiar whose services to the Hindu religion have been regarded as noteworthy. I have endeavoured to bring out the relevant facts from available records and comments to embellish this brochure.

I am greatly indebted to Professor Dr. S Pathmanathan, Dr. S. K. Sittampalam, Head of the Dept. of History and to Mr. P. Pushparatnam, Mr. M. Thirunavukarasu, Mr. S. Krishnarajah Miss Kalyani Nagarajah, and Mrs S. Krishnakumar lecturers, all of the University of Jaffna who nurtured me into the best traditions of learning and research at the University.

I am very thankful to the contributors, Ruby Photographers, Chitra'aya Block makers, the Manager and the staff of the Saivaprakasa Press for having illumined this Souvenir.

Thank you all.

Vannarponnai,
9-9-89

M. Umashankari
Editor

*Saiva Prakasa Prees, Jaffna J. No. 104 / 1989*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org